2015 ஆகஸ்ட் 25]

நிச்சயமாக பன்முக மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***42375 திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சி, காமநாயக்கம்பாளையத்தில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அழியாக் கடலோ, அணிமலர்த் தடமோ, வானுறு மீனோ, மாளிகை விளக்கோ, கற்பகத் தருவோ என தமிழ்நாட்டு மக்கள் வியந்து வரவேற்றிட, (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் திரவமாம் தாய்ப் பாலைக் குழந்தைகளுக்குத் தவறாமல் தந்திட தாய்மையின் எண்ண அலைகளுக்கு ஏற்றம் தந்து, தாய்ப் பால் ஊட்ட தனி அறைகள் அமைத்து, தலைவர்களின், மக்களின் கலங்கரை விளக்காய் இருந்து பல்வேறு துறைகளிலும் பாருக்கே எடுத்துக்காட்டு தமிழ்நாடு என உயர்த்திட்ட, யாதுமாய் நின்ற தாயை வணங்குகிறேன்.

பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சி, காமநாயக்கம்பாளையத்திலுள்ள நெசவாளர்களுக்கு கூட்டுறவுச்

சங்கம் அமைக்க சாத்தியக் கூறுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்.

பல்லடம் தொகுதி, பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சி, காமநாயக்கம்பாளையத்திலுள்ள நெசவாளர்களுக்குப் புதிதாக ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்ய கடந்த 6—9—2013 ஆம் தேதியன்று மனு பெறப்பட்டது. அதனைப் பரிசீலனை செய்து பதிவு செய்வது குறித்து, திருப்பூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையில், கோரிக்கை மனு அளித்த, கே. கிருஷ்ணாபுரம் கிராம ஊராட்சித் தலைவர் திரு. எம். மந்திராசலமூர்த்தி அவர்கள் புதிய சங்கம் அமைத்துத் தர கோரிய உறுப்பினர்கள் எவரும் தற்போது முன்வராத காரணத்தினால், புதிய சங்கம் அமைக்கத் தேவையில்லையென தனது 25—2—2015 ஆம் தேதியன்று கடிதத்தில் தெரிவித்துவிட்ட காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு புதிய கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் துவக்கப்படவில்லை என்பதை மாமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

திரு. கே.பி. பரமசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் வெற்றி! எதிலும் வெற்றி! தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு இலக்கணமாகத் திகழ்கின்ற வகையில் ஆர்.கே. நகர் தொகுதியில் இந்தியத் துணைக் கண்டம் மட்டுமல்லாமல் உலகமே வியக்கத்தக்க வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி பெற்று (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் சட்டமன்றப் பேரவைக்கு வருகை தந்து எதிரிகளின் சிம்மசொப்பனமாக விளங்கிக் கொண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக வழி நடத்திக்கொண்டும், தனக்காகவோ, தன் குடும்பத்திற்காகவோ அல்லாமல் தமிழ் மக்களுக்காக ஒவ்வொரு நாளும் சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தனித்துவம் மிக்க சக்தி வாய்ந்த தலைவி, தங்கத்தாரகை, இதய*

2015 ஆகஸ்ட் 25]

தெய்வம் அம்மா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி வாழ்த்துகிறேன்.

பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணாபுரம் ஊராட்சி காமநாயக்கம்பாளையத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த தலைசிறந்த திட்டங்களில் ஒன்றான நெசவாளர்களுக்குப் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் 87 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அங்கு 87 நெசவாளர்களும் ஒதுக்கப்பட்டுள்ள வீட்டுமனைகள் அனைத்திலும் நெசவாளர்கள் குடும்பங்களைச் சார்ந்தவர்கள்தான் அங்கு பயனடைய இருக்கின்றார்கள். விரைவிலே வீட்டுப் பணிகள் முடிவடையும் சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தால், இப்போது கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு 87 உறுப்பினர்களும் தயாராக இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து சங்கம் அமைப்பதற்கான ஆணையை வழங்குமாறு பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களில் குறைந்தபட்சம் 25 பேர்கள் ஒன்றிணைந்து அவர்களில் ஒருவரை முதன்மை அமைப்பாளராகக் கொண்டு தீர்மானம் இயற்றி, ஒரு புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்ய மாவட்ட அளவில் உள்ள கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநரிடம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின்கீழ் உரிய படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதனைத் துறை பரிசீலனை செய்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் தலைமைச் சங்கமான கோ-ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் இசைவைப் பெற்று, புதிய சங்கத்தை உதவி இயக்குநர் பதிவு செய்ய உரிய சான்றிதழ் வழங்குவார்கள். தற்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சங்கத்தை மீண்டும் துவங்கிட உறுப்பினர்கள் தயாராக இருப்பதாகவும், அதற்கு ஆவன செய்யவேண்டி கோரிக்கை வைத்துள்ளார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஒரே நேரத்திலே 10,000 நெசவாளர்கள் குடும்பத்திற்கு ரூ.260 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பசுமை வீடுகள் தந்தது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலேதான். அதைப்போல

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கக்கூடிய பல்லடம் தொகுதியில் 55.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் 22.17 கோடி ரூபாய் மத்திய அரசு மானியத்துடன் 4.98 கோடி ரூபாய் மாநில அரசு மானியத்துடனும் பல்லடத்தில் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காவை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அமைத்துள்ளது என்பதையும், இன்றைக்கு அந்த இடத்திலே 6,000 நெசவு சார்ந்த தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் தொடர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றார்கள் என்பதையும் இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்து, மாமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி அனைத்து உறுப்பினர்களும் ஒருங்கிணைந்து மீண்டும் மனு செய்தார்களேயானால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

படகுக் குழாம்

***21892—திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலியிலுள்ள நயினார்குளத்தினைச் சீரமைத்து, அதில் படகுக் குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினை அனைத்துத் துறைகளிலும் முதலிடத்திற்குக் கொண்டு வர எடுத்த